பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

31 03 2026  TUESDAY  6 45 AM

<u>வணக்கம் - மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நக்ஸலைட்டு பிரச்சினைகளிலிருந்து நாடு விடுபட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2. தேர்தல் பிரச்சாரம் தொடர்பாக அனுமதி பெறுவதற்கான விண்ணப்பங்களை, SUVIDHA இணையதளம் மூலம் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

3. கடந்த அஇஅதிமுக ஆட்சியில், கல்வித்துறைக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அக்கட்சி கூறியுள்ளது.

4. தமிழகத்தில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட 5 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில், ராஜஸ்தான் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் சென்னையை அணியை வென்றது.

>>>>><<<<<

அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலம், நக்ஸலைட்டு பிரச்சினைகளிலிருந்து நாடு விடுபட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மக்களவையில் நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர், நக்ஸலைட்டுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

நக்ஸலைட்டு கட்டமைப்புகள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் 12 மாநிலங்களில் நக்ஸலைட்டுகளின் ஆதிக்கத்தாலும், வன்முறையாலும் 20 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதாகவும், 12 கோடி பேர் வறுமையில் வாழ்வதாகவும் அவர் கூறினார்.

இந்நிலையில், கடந்த ஆறு ஆண்டுகளில், திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, துணை ராணுவப் படையினர் மற்றும் காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலம், நாட்டில் நக்ஸல் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நக்ஸலைட்டுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கட்டுரை எழுதுபவர்கள், பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்த எந்த கருத்தும் தெரிவிப்பதில்லை என்று அவர் கூறினார்.

இப்பிரச்சினைக்கு முடிவுகட்ட ஆட்சிப் பொறுப்பிலிருந்த காங்கிரஸ் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை என்று திரு. அமித் ஷா குற்றம் சாட்டினார்.

இதற்கிடையே, சமூகவலைதளத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா மக்களவையில் அளித்த பதிலை பகிர்ந்துள்ளார்.

அதில் நக்ஸலைட்டுகளை ஒழிக்க மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை, திரு. அமித் ஷா புள்ளி விவரங்களுடன் எடுத்துரைத்துள்ளதாக கூறியுள்ளார்.

அனைவருக்கும் அமைதி மற்றும் வளத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்றும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

தேர்தல் பணிக்காக தற்காலிக கட்சி அலுவலகம் திறப்பதற்கான அனுமதி, கூட்டம், ஊர்வலம், பேரணி நடத்துவதற்கான அனுமதி, வாகன அனுமதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளின் அனுமதிக்கான விண்ணப்பங்களை SUVIDHA இணையதளம் மூலம் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

*இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், இத்தகைய விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட சட்டப்பேரவை தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தில், 24 மணி நேரத்தில் பரிசீலனை செய்யப்பட்டு தீர்வு காணப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இந்த விண்ணப்பங்களை Suvidha.eci.gov.in என்ற இணையதள முகவரியில் சமர்ப்பிக்கலாம் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதற்கிடையே, சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட 16 சட்டப்பேரவை தொகுதிகளில் இதுவரை, சுவிதா செயலி மூலம் ஆயிரத்து 157 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அதில் 724 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.*

*214 விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.*

*மேலும், சென்னை மாவட்டத்தில் காவல் ஆணையாளரால் பரிந்துரைக்கப்பட்ட 291 இடங்களில் மட்டுமே தேர்தல் தொடர்பான கூட்டங்கள் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.*

*வேட்புமனு தாக்கல் தொடங்கிய நேற்று, சென்னை மாவட்டத்தில் 47 வேட்புமனுக்கள் பெறப்பட்டுள்ளதாகவும் திரு. குமரகுருபரன் கூறியுள்ளார்.*

*>>>>><<<<<*

*கடந்த அஇஅதிமுக ஆட்சியில், கல்வித்துறைக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டது என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.*

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், தமது ஆட்சியில் ஒரே ஆண்டில், 11 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஏற்படுத்தப்பட்டதாக கூறினார்.

நாட்டிலேயே உயர்கல்வியில் முதன்மை மாநிலம் என்ற நிலையை தமிழகம் 2019ஆம் ஆண்டிலேயே அடைந்துவிட்டதாக திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தில் உயர்கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக திமுக இளைஞர் அணி செயலாளர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி, கீழ்பெண்ணாத்தூர் ஆகிய தொகுதிகளில் நேற்று அவர் பிரச்சாரம் மேற்கொண்டார்.

திமுக அரசின் பல்வேறு திட்டங்கள் மூலம் மாநிலம் வளர்ச்சியடைந்துள்ளதாகவும் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட 5 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, பழநியில் திரு. என். பாண்டியும், கந்தர்வக்கோட்டையில் திரு. எம். சின்னதுரையும், பத்மநாபபுரம் தொகுதியில் திரு. ஆர். செல்லசுவாமியும், திருவொற்றியூரில் திரு. எல். சுந்தர்ராஜனும், கீழ்வேளூர் தொகுதியில் திருமதி. டி. லதாவும் போட்டியிடுவதாக அக்கட்சியின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதன்மை தேர்வு முடிவுகளை வெளியிட்டுள்ளது.

சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்வுக்கான 160 தேர்வர்களின் பட்டியலை அந்த ஆணையம் அறிவித்துள்ளது.

சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்வு வரும் 15 மற்றும் 16ஆம் தேதிகளில் நடைபெறும் என்று தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தென்தமிழக கடலோர மாவட்டங்கள், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனையொட்டிய மாவட்டங்களில் அடுத்த நான்கு நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வரும் 4 மற்றும் 5ஆம் தேதிகளில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பல்வேறு இடங்களில் மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

ஈரான் மீது, அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடத்துவதற்கு, தமது வான்வழியைப் பயன்படுத்த ஸ்பெயின் அனுமதி மறுத்துள்ளது.

>>>>><<<<<

போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கான ஒப்பந்தம் விரைவில் எட்டப்படாவிட்டால், ஈரானின் எரிசக்தி வளங்கள் மற்றும் கடல்நீர் சுத்திகரிப்பு ஆலைகள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

>>>>><<<<<

மஹாவீர் ஜெயந்தியை ஒட்டி, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, குஜராத் மாநிலத்தில் இன்று 19 ஆயிரத்து 806 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

>>>>><<<<<

செங்கல்பட்டு மாவட்டம், கல்பாக்கத்தில் சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி, பதற்றமான பகுதிகளில் காவல்துறையினரின் அணிவகுப்பு நடைபெற்றது.

>>>>><<<<<

கள்ளக்குறிச்சி அருகே மாடூர் பகுதியில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி, சமையல் எரிவாயு சிலிண்டர்களில் விழிப்புணர்வு வில்லைகள் ஒட்டப்பட்டது.

>>>>><<<<<

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட மோரை ஊராட்சியில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

>>>>><<<<<

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியில், போதைப்பொருள் வைத்திருந்த 6 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>><<<<<

பிரசித்தி பெற்ற ஈரோடு மாவட்டம், அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் கோவில் குண்டம் திருவிழா இன்று அதிகாலை தொடங்கியது.

>>>>><<<<<

காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித்துறை, பொது சுகாதாரத்துறை சார்பில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

>>>>><<<<<

சென்னை மாவட்டத்தில் நேற்று தேர்தல் பறக்கும் படையினர் நடத்திய சோதனையில் உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட 77 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில், ராஜஸ்தான் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் சென்னையை அணியை வென்றது.

குவஹாத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த சென்னை அணி 19 புள்ளி 4 ஓவரில் 127 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக ஜெமி ஓவர்டன் 43 ரன் எடுத்தார்.

128 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ராஜஸ்தான், 12 புள்ளி ஒரு ஓவரில் 2 விக்கெட்டை இழந்து, இலக்கை எட்டியது.

அதிகபட்சமாக அந்த அணியின் தொடக்க வீரர் வைபவ் சூர்யவன்ஷி 17 பந்துகளில் 52 ரன் எடுத்தார்.

நியூசண்டிகரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பஞ்சாப் – குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

ஆசிய கோப்பை கால்பந்து போட்டியின் தகுதிச்சுற்று ஆட்டத்தில், இந்தியா இன்று ஹாங்காங்கை எதிர்கொள்கிறது.

கொச்சியில் நடைபெறவுள்ள இப்போட்டி, இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

>>>>><<<<<